**செப்டம்பர் - 25**

**"அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார்." - 1கொரி 1 : 31.**

நம்மை மீட்டுக்கொண்ட அல்லது தனது சொந்த ஜீவனின் பலியினாலே நம்மை கிரயமாகக் கொண்ட அவர், நம்முடைய விழுந்துபோன நிலையையும் தம்மை நமது சகாயராகவும் நாம் கண்டுகொள்ள நம்முடைய தீர்க்க தரிசியாகவோ, அல்லது போதகராகவோ நமக்குத் தம்முடைய சுவிசேஷத்தினாலே ஞானத்தைக் கொடுக்கிறார். நம்முடைய ஆசாரியராக அவர் முதலாவது நம்மை நீதிமான்களாக்குகிறார். பிறகு நம்மைப் பரிசுத்தமாக்குகிறார் அல்லது பிரதிஷ்டை செய்கிறார். முடிவாக ராஜாவாக அவர் உண்மையுள்ளவர்களை பாவம், மரணம் இவைகளின் ஆதிக்கத்திலிருந்து பூரணமாக விடுதலை செய்து அவருடைய ராஜ்யத்தில் ஒரு மகிமையான பங்கை அடைய விடுவார். ஏனென்றால், "தேவன் நம்மையும் யேசுவைக்கொண்டு எழுப்புவார். (மரித்தோரிலிருந்து) அல்லேலூயா! எவ்வளவு பெரிய இரட்சகர்! தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிற எல்லோரையும் முற்றுமுடிய இரட்சிக்க உண்மையாகவே அவர் சக்தி உள்ளவரும், இஷ்டமுள்ளவருமாயிருக்கிறார். **- Z '03, 440 (R 3279**

நம்முடைய எல்லாத் தேவையையும் நமக்குக் கொடுக்க தேவன் யேசுவை நியமித்தார். அவர் நமக்குத் தேவனுடைய முழு ஆலோசனையையும் போதிக்கிறதினாலே அவர் நம்முடைய ஞானமாயிருக்கிறார். அவர் தமது புண்ணியத்தை நமக்குச் சாட்டி நீதியை அப்பியாசிக்க நம்மை சாத்தியமாக்குகிறதினாலே அவர் நம்முடைய நீதியாயிருக்கிறார். நம்முடைய மனுஷிகத்தை மரணத்துக்குப் பிரதிஷ்டை செய்ய நம்மை சாத்தியமாக்குகிறதினாலும் ஒவ்வொரு நல்ல எண்ணத்திலும், குணத்திலும், வார்த்தையிலும், கிரியையிலும் வளர நம்மை சாத்தியமாக்குகிறதினாலும் அவர் நமக்கு பரிசுத்தமாயிருக்கிறார். ஒரு ஜெயங்கொள்ளும் விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும், கீழ்ப்படிதலையும் நாம் அப்பியாசிக்க உதவி செய்வதின் மூலமாக நம்முடைய எல்லா ஆவிக்குரிய சத்துருக்கள் மேலும் வெற்றியடைய அவர் நம்மை சாத்தியமாக்கி, முடிவாக நாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தால், மரித்தோரிலிருந்து நம்மை எழுப்பி மரணத்தின் மேலும் (மரித்துக் கொண்டேயிருக்கும் நிலையின் மேலும், பாதாளத்தின் மேலும் மரித்துப்போன நிலையின் மேலும்) நமக்கு வெற்றி தருவார் என்பதினாலே அவர் நமது விடுதலையாயிருக்கிறார். அல்லேலூயா! எவ்வளவு பெரிய இரட்சகர்!. **- P '30, 152.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**எரே 9:23,24; மத் 23:8,10; 1கொரி 1:18-29; கொலோ 3:2; ரோம 3:21-26; 4:20-25; 5:1;10:3-14; யோவா 17:17-19; அப் 26:17,18; 1கொரி 1:2; எபே 5:25-27; எபி 2:11; ரோம 11:26; லூக் 4:18; மத் 6:13; ரோம 7:24,25; 2தீமோ 4:18; எபி 2:15.**

**கோபுர வாசிப்பு : Z '14, 228 (R 5506).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் யேசுவை எனது போதகராகவும், நீதிமானாக்குகிறவராகவும், பரிசுத்தமாக்குகிறவராகவும், விடுவிக்கிறவராகவும் ஏற்றுக்கொண்டேனா? அதில் அனுகூலமாக அல்லது பிரதிகூலமாக இருந்தவை எவை? அதில் விளைந்த பலன் என்ன?**